

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு நேற்று (05.07.2025) எழும்பூர், சீனிவாசப் பெருமாள் திருக்கோயில் சார்பில் கட்டப்படும் புதிய திருமண மண்டபத்தின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி. என். ஸ்ரீதர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, கண்காணிப்பு பொறியாளர் .பழனி மற்றும் அலுவர்கள் உள்ளனர்.

### ‘பசுமைத் தமிழ்நாடு மிஷன்’ மூலம் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும்

# 16 இலட்சம் அலையாத்தி தாவரங்கள் நட்டு சாதனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜுலை 6 - “பசுமைத் தமிழ்நாடு மிஷன் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 16 இலட்சம் அலையாத்தித் தாவரங்களை நட்டு 707 ஹெக்டேர் அலையாத்திப் பரப்பை மீட்டுள்ளோம்” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**பசுமைத் தமிழ்நாடு மிஷன் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 16 இலட்சம் அலையாத்தித் தாவரங்களை நட்டு 707 ஹெக்டேர் அலையாத்திப் பரப்பை மீட்டுள்ளோம்!**

**திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 1,350 ஹெக்டேர் அளவுக்குப் புதிய அலையாத்திக் காடுகளை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளது நமது திராவிட மாடல் அரசு.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 136-வது நாள்!

### எழும்பூர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,ஜுலை.6- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 136 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (05.7.2025) எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 77 அ, புளியந்தோப்பு 1 ஆவது தெரு, மாத்தம்மன் கோயில். 2) வட்டம் 78 அ, சூளை அங்காளம்மன் கோவில் தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ. ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: B.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி. அபாய், தி.தயாளன், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: S.முரளி, R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



### திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு

# திராவிட மாடல் ஆட்சியின் ஆன்மீக புரட்சிக்கு மைல்கல்லாக அமையும்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

திருச்செந்தூர், ஜுலை 6- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (05.07.2025) எழும்பூர், சீனிவாசப் பெருமாள் திருக்கோயில் சார்பில் கட்டப்படும் திருமண மண்டபம், வில்லிவாக்கம், அகத்தீஸ்வரர் திருக்கோயில் சார்பில் கட்டப்படவுள்ள பல்நோக்கு மண்டபம் அமைக்கும் இடம், கொளத்தூரில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடம் மற்றும் கொளத்தூர், பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டட கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி. கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயிகளின் சார்பில் கட்டப்பட்டு வருகின்ற திருமண மண்டபங்கள், மூத்த குடிமக்கள் உறைவிடம் மற்றும் கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றின் கட்டுமான பணிகள் நேர்த்தியாக அமைந்திடும் வகையிலும், பணிகளை விரைவுப்படுத்திடவும் ஆய்வினை மேற்கொண்டோம். சென்னை, கொளத்தூர் ராஜாஜி நகரில் கடந்த 27.5.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர், பழனி மற்றும் திருநெல்வேலியில் மூத்த குடிமக்கள் உறைவிடம் கட்டுவதற்கு கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துறையின் சார்பிலான ஆய்வுக் கூட்டங்களை மேற்கொள்கின்றபோது மூத்த குடிமக்களுக்காக கட்டுகின்ற உறைவிடங்களின் பணி முன்னேற்றத்தை தொடர்ந்து கேட்டறிந்து வருகின்றார். இந்தப் பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மூத்த குடிமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். கொளத்தூரில் அமையவுள்ள மூத்த குடிமக்களின் உறைவிடத்தில் 100 மூத்த குடிமக்கள் தங்கும் வகையில் குளியலறை, கழிப்பறை வசதியுடன் அறைகள், உணவருந்தும் அறை, நூலகம், மருத்துவ மையம், சிறு பூங்கா, யோகா மற்றும் தியான அறை, நடைபாதைகள் போன்ற வசதிகள் அமைக்கப்படுகின்றன. இந்த உறைவிடங்களை பராமரிக்க முன்னணி நிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதி மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது. கொளத்தூர் மூத்த குடிமக்கள் உறைவிடத்திற்கு இதுவரை ரூ.5 கோடி நிதி வரப்பெற்றுள்ளது.

தமிழ்க் கடவுள் முருகனுக்கு இந்த ஆட்சியில் தொண்டு செய்வதற்கு கிடைத்த வாய்ப்பைப் போல் இதுவரையில் வேறு எந்த ஆட்சியிலும் கிடைக்கவில்லை. அதனை எங்கள் திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய ஒரு வரப்பிரசாதமாக நினைக்கின்றோம். தமிழ்க் கடவுள் முருகனுக்கு தேவையான அனைத்தையும் நிறைவேற்றி தருகின்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி அமைந்திருக்கின்றது. அந்த வகையில் பழனி திருக்கோயிலின் பெருந்திட்ட வரைவு பணிகளுக்கு முன்பாகவே குடமுழுக்கு நிறைவு செய்யப்பட்டு இன்றைக்கு திருப்பதி போல் மிக பிரம்மாண்டமாக பழனி திருக்கோயில் காட்சி அளித்து கொண்டிருக்கிறது. அறுபடை வீடுகளில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகின்ற 14.7.2025 குடமுழுக்கு நடைபெற இருக்கின்றது. இந்திய ஒன்றியத்தையே திரும்பி பார்க்க வைத்திருக்கின்ற வகையில் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி குட முழுக்கு வருகின்ற 7ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. அதில் லட்சோப லட்சம் மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி குடமுழுக்கு விழாவிற்கு மூன்று இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்களும், திருக்கோயில் குடமுழுக்கை அனைத்து பகுதிகளிலும் காணும் வகையில் எல்இடி அகன்ற திரைகள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளன. பக்தர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மருத்துவ வசதி ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. பாதுகாப்பு பணியில் 6000 காவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதோடு 25 மருத்துவக் குழுக்களும், 27 இடங்களில் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்படவுள்ளன. முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் தலைமைச் செயலகத்தில் நடத்திய துறை ஆய்வுக் கூட்டத்தில் திருச்செந்தூர் திருக்கோயிலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். பக்தர்களுக்கு லட்சக்கணக்கான உணவு பொட்டலங்கள் தயாரித்து வழங்கிடவும் உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும், குடமுழுக்கு விழா பணிகளுக்காக மூன்று ஐஏஎஸ் அதிகாரிகளை இன்றிலிருந்து கூடுதல் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே திருச்செந்தூர் திருக்கோயில் குடமுழுக்கு விழா சிறப்புடன் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து, இது இந்த ஆட்சியின் ஆன்மீக புரட்சிக்கு ஒரு மைல்கல் என்றே குறிப்பிடலாம்.

திருக்கோயில்களில் மருந்து சாத்திய பிறகுதான் குடமுழுக்கு நடைபெறும். திருச்செந்தூர் திருக்கோயிலில் குடமுழுக்கு நடந்த பின்னரே மருந்து சாத்தும் நிகழ்வு நடைபெறுவது மரபாக உள்ளது. குடமுழுக்கை தொடர்ந்து 48 நாட்கள் மண்டல பூஜை நடைபெறுகிறது. முதல் 30 நாட்கள் மண்டல பூஜையோடு திருக்கோயில் திருவிழாவும் தொடங்குகின்றது. ஆகவே திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு இந்த 30 நாட்களில் பக்தர்கள் எப்போது வந்து தரிசனம் செய்தாலும் குடமுழுக்கில் கலந்து கொள்ளுகின்ற புண்ணியம் கிடைக்கும். இத்திருக்கோயிலில் ஜுலை ஒன்றாம் தேதி முதல் யாகசாலை பூஜைகள் ஆறு நாட்கள் நடைபெறுகின்றன.

திருச்செந்தூர், திருக்கோயிலில் கடைபிடிக்கப்பட்டு வரும் மரபு மற்றும் கடந்த குடமுழுக்குகளின் பழக்க வழக்கத்தின்படி குட முழுக்கிற்கு முன்தினம் பகல் 12 மணிக்கு நடை அடைக்கப்படுவதோடு, மறுநாள் காலையில் குடமுழுக்கு நிறைவு பெற்ற பின், மருந்து சாத்தும் நிகழ்வு மாலை வரை நடைபெறும். அதற்கு பின்னரே பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிப்பது தொடர்பாக முடிவெடுக்கப்படும்.

அன்னதானம் என்ற நிலையில் எப்படி வேண்டுமென்றாலும் உணவு வழங்கினால் அது பக்தர்களுக்கு உடல் உபாதை ஏற்படுகின்ற போது இது போன்ற திருவிழா காலங்களில் பெரிய அளவிலான பாதிப்பை உண்டாக்கும். ஆகவே முறையான அனுமதி பெற்று யார் வேண்டுமானாலும் அன்னதானம் செய்யலாம். அவர்கள் வழங்குகின்ற அன்னதானத்தை பரிசோதிப்பதற்கு அன்னதான பரிசோதனை குழு ஒன்றை அமைத்திருக்கின்றோம். எங்களின் நோக்கம் வழங்கப்படுகின்ற அன்னதானத்தால் அதனைப் பெற்று அருந்துகின்ற பக்தர்களுக்கு எந்த விதமான உடல்நல பாதிப்பு ஏற்படக்கூடாது, அது இயற்கையான நேர்த்தியான உணவாக இருக்க வேண்டும் என்பதுதான்.

மக்களை நோக்கி விஜய் அவர்களின் பயணத்தை தொடங்க சொல்லுங்கள். அவர் பயணத்தையே செப்டம்பர் மாதத்திற்கு மேல் தான் தொடங்குவேன் என்று சொல்கிறார். நேற்று காத்திருந்த தொண்டர்களை கூட பார்க்க முடியாமல் இருந்த செய்தி ஊடகங்களில் வந்தது. ஆகவே அவர், முதலில் தன்னையும், தன்னை சார்ந்து இருக்கின்ற இயக்கத்தையும் பார்த்துக்கொள்ள சொல்லுங்கள். மக்களை பாதுகாக்க எங்களுடைய மக்களின் முதல்வர் இருக்கின்றார். நிச்சயமாக முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பில் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் வராமல் அதே நேரத்தில் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற, வளர்ச்சிக்கு தேவையான கட்டமைப்புகளை அமைத்து மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்துவிட்டு தான் நடவடிக்கையை மேற்கொள்வார். எடுத்தேன், கவிழ்த்தேன் என்பது போல் எங்கள் முதலமைச்சர் அவர்கள் மக்களை பாதிப்பிற்குள்ளாக்கும் எந்த ஒரு திட்டத்தையும் கொண்டு வருவதற்கு நிச்சயமாக முற்பட மாட்டார். ஆகவே விஜய் அவர்கள் தேவையில்லாமல் முதல் வரை சந்திப்பேன் என்று கூறிக் கொண்டிருக்கிறார். அறையில் அமர்ந்து கொண்டு அறைகூவல் விடுவதை முதலமைச்சர் அவர்கள் எளிதாக தனது லெப்ட் ஹேண்டில் (Left Hand) கையாண்டு செல்வார்.

மடப்புரம் திருக்கோயில் காவலாளி அஜித் சோர்சில் பணி புரிபவர். அவரது இறப்பு தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் தானே முன்வந்து வருத்தம் தெரிவித்துள்ளார். இதுபோல் எந்த மாநிலத்தின் முதலமைச்சரும் இப்படி தானாக முன்வந்து வருத்தம் தெரிவித்ததில்லை. அக்குடும்பத்திற்கு தேவையான நிவாரணத்தை வழங்கி இருக்கின்றார். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு, கடுமையான சட்டப்பிரிவின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவத்திற்கு தமிழக அரசே சிபிஐ விசாரணை கோரி இருக்கின்றது. தவறு எங்கு நடந்தாலும் விசாரணை முடிவில் யார் குற்றவாளியாக இருந்தாலும் தண்டிப்பதற்கு சட்டத்தின் ஆட்சி நடத்துகின்ற எங்கள் முதலமைச்சர் அவர்கள் தவற மாட்டார் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி. என். ஸ்ரீதர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகா தேவி, திருமதி ஜ.முல்லை, திருமதி பெ.க.கவெனிதா, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் கூ.பீ.ஜெயின், திருமதி சரிதா மகேஷ் குமார், கண்காணிப்பு பொறியாளர் பழனி, செயற்பொறியாளர் மணிவண்ணன், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் நாகராஜன், ஐசிஎப் முரளிதரன், சந்துரு, மகேஷ் குமார், திருமதி அமுதா, கல்லூரி முதல்வர் திருமதி லலிதா மற்றும் அலுவர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் அமைச்சர் பி கே சேகர்பாபு தலைமையில் ஓட்டேரி MKT மஹாலில் நடைபெற்றது இதில் கழக மாணவர் அணி செயலாளர் ராஜீவ் காந்தி பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார் இந்நிகழ்வில் திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம்கவி, திரு.வி.க நகர் பகுதி கழக செயலாளர்கள் தமிழ் வேந்தன், சாமிகண்ணு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய் வட்ட கழக செயலாளர் ருத்ரமூர்த்தி மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஜோஸ்வா லிவிங்ஸ்டன், கு.வேணுகோபால், எஸ்.பாலாஜி, எஸ்.மதனரூபன், எஸ்.எஸ்.மணிகண்டன், அசோக் ஆண்ட்ரூஸ்,மா.ஜெயலட்சுமி, இறுதியாக திரு.வி.க நகர் வடக்கு பகுதி மாணவரணிஅமைப்பாளர் ஜே.நிறைமொழி நன்றி கூறினார்.



தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட சிட்லபாக்கத்தில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ அவர்கள் மண்டலம்.3.34,வது வட்டத்தில், தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.20.இலட்சம் மதிப்பீட்டில் இசேவை மைய கட்டிடம் கட்டும் பணியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி,செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ்,பொதுக்குழு உறுப்பினர்.க.தேவேந்திரன்,இரா.விஜயகுமார்,சி.சுரேஷ்.எம்.சி மற்றும் அணிகளின் நிர்வாகிகள்,கழக தோழர்கள் பங்கேற்றனர் .



சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி, திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன், திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் மாநகராட்சி மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு ஆகியோரின் தலைமையில் வட்ட கழக செயலாளர் த.கார்த்திகேயன் முன்னிலையில் நேற்று (5.7.2025 – சனிக்கிழமை) காலை, ஓரணியில் தமிழ்நாடு என்ற இயக்கத்தை வலுப்படுத்த, சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 7வது வார்டு சௌந்தரபாண்டியன் தெரு, பக்தவச்சவம் தெரு, திருவள்ளூர் தெரு, நேதாஜி தெரு, பாகம் எண் 158ல், பாக முகவர் BLA2 பாலகிருஷ்ணன், BDA மணிகண்டன் ஆகியோருடன் உறுப்பினர் சேர்க்கை பணி நடைபெற்றது. இதில் குறிஞ்சி எஸ்.கணேசன், எம்.வி.குமார், ஆர்.குமரேசன், என்.சுந்தரமூர்த்தி, எம்.கோமலவள்ளி, எஸ்.ஆர். மலைராஜ், டி.பி.பாலசுந்தரம், சாரதி, பாலாஜி, நவாஸ் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வட்டம் 358 வது பாகப் பகுதிகளில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டலக்குழு தலைவருமான என். சந்திரன் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை வீடு வீடாக சென்று துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் 167 வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், பாக முகவர், தொழில்நுட்ப முகவர், மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.



‘ஓரணியில் தமிழ்நாடு’ நேற்று (5.7.2025) ஆலந்தூர் வடக்கு பகுதி வட்டம் –160, பாகம் எண் 276–ல் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்ட் பிரகாஷ் கழக அரசின் திட்டங்களை எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டார். உடன் வட்டச் செயலாளர் முரளி கிருஷ்ணன், குமார், நூறு அஹமத் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.